## கனமழை: வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை !

# கால்வாய் முகத்துவாரங்களை தூர்வாரும் பணிகள் விரைவில் முடிவடையும்!

## முட்டுக்காட்டில் – பக்கிங்காம் கால்வாய் நீர்வழிப் பாதைகளை பார்வையிட்டு

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக்.15-**

**சென்னையில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பக்கிங்காம் கால்வாய் கடலில் கலக்கின்ற முட்டுக்காடு, சோழிங்கநல்லூர், காரப்பாக்கம் மற்றும் அடையாறு நீர் வழிப்பாதைகளைப் பார்வையிட்டு, மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து, அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.**

**இந்த ஆய்வுக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய துணை முதல்வர் அவர்கள், "கால்வாய் முகத்துவாரங்களைத் தூர்வாரும் பணி விரைவில் முடிவடையும்" என்று அறிவித்தார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைத் தொடர் ஆய்வு செய்து வருகிறார். சென்னையின் மழைநீர் வடிகாலுக்கான முக்கிய நீர் வழித்தடமாக இருக்கின்ற அடையாறு, பக்கிங்காம் கால்வாய் முகத்துவாரம் அமைந்துள்ள பகுதிகளில் நடைபெறும் பணிகளை, அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் ஆய்வு செய்தார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது :

"வடகிழக்குப் பருவமழை விரைவில் தொடங்கவுள்ளது. சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இந்த முறை மிக கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை மையம் எச்சரித்துள்ளது.

**எச்சரிக்கை நடவடிக்கைகள்!**

கனமழையால் பாதிப்பு ஏற்படாத வண்ணம், முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், பல்வேறு முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை, நம் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

மழைநீர் கடலில் கலக்கும் பக்கிங்காம் கால்வாயின் முகத்துவாரம் அமைந்துள்ள முட்டுக்காட்டில் நடைபெறும் தூர்வாரும் பணியை, இன்று ஆய்வு செய்திருக்கிறோம்.

குறிப்பாக, சென்னை, அதையொட்டிய திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில், மழைநீர் தேங்காமல் இருக்க, நீர்வளத்துறை சார்பில், சுமார் ரூ.39 கோடி செலவில் 180 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**200 கிலோ மீட்டர் தூரம்!**

சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் 200 கிலோ மீட்டர் தூரத்துக்குத் தூர்வாருதல் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. இந்தப் பணிகள், 200க்கும் அதிகமான ஜே.சி.பி. உள்ளிட்ட எந்திரங்களைக் கொண்டு, கடந்த மூன்று மாதங்களாகத்



தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இரவு பகல் பாராமல் ஆயிரக்கணக்கான பணியாளர்கள், இந்தப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

**ஆய்வுக் கூட்டங்கள்!**

அதுமட்டுமல்லாமல், கடந்த மூன்று மாதங்களாக நம் நீர்வளத்துறை அமைச்சர், பொதுப்பணித்துறை அமைச்சர், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர், நிதித்துறை அமைச்சர், மின்சாரத்துறை அமைச்சர் மற்றும் சென்னையில் இருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில், அனைத்து அரசு அதிகாரிகளுடன் மூன்று ஆய்வுக்கூட்டங்களைத் தொடர்ந்து நடத்தி உள்ளோம். கடந்த வாரம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் ஒரு ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டு இருக்கிறது.

சென்னையைச் சுற்றியுள்ள பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லான், விருகம்பாக்கம் – அரும்பாக்கம் கால்வாய், ஒக்கியம் மடு போன்ற பெரிய நீர்நிலைகளில் முழுவீச்சில் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஏரிகளைப் பொறுத்தவரை, அம்பத்தூர் ஏரி, போரூர் ஏரி, நாராயணபுரம் ஏரி, கீழ்க்கட்டளை ஏரி போன்ற ஏரிகளில் தண்ணீர் செல்லும் நீர்வழிப்பாதைகள் சுத்தம் செய்யப்பட்டுள்ளன. இதுவரை நடந்த பணிகளில் மொத்தம் 1,500 லோடு ஆகாயத்தாமரை உள்ளிட்ட குப்பைகள் - மணல் திட்டுகள்போன்றவை, நீர்வழிப்பாதைகளில் இருந்து அகற்றப்பட்டுள்ளன.

**ரூ.232 கோடி மதிப்பு!**

குறிப்பாக, கொசஸ்தலை ஆறு, கூவம் ஆறு, அடையாறு ஆகியவற்றின் முகத்துவாரத்தை நிரந்தரமாக திறந்து வைக்கும் வண்ணம் மொத்தம் ரூபாய் ரூ.232 கோடி மதிப்பில் 3 தூண்டில் வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோல, பக்கிங்காம் கால்வாய் செல்லும் இந்த முட்டுக்காடு பகுதியிலும், முகத்துவாரத்தைச் சீரமைக்கும் பணிகள் முழு வீச்சில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**நடவடிக்கைகள்!**

சென்னை மற்றும் புறநகரில் கடந்த 3 மாதங்களுக்கு மேலாக நடைபெற்று வரும் இந்தப் பணிகள், மழைக் காலத்திலும் இடைவிடாது தொடரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மக்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் எந்தவித பாதிப்பும் வரக்கூடாது என்பதில் மிகுந்த உறுதியோடு, நம் அரசும், நம் முதலமைச்சர் அவர்களும் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறினார்.

அப்போது அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், துணை முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அருண்ராஜ் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## அக்.19 அன்று – 'என் உயிரினும் மேலான...' இறுதிப்போட்டி!

# முதல்வர் தலைமையில் - அக்.20 - பிரமாண்ட பரிசளிப்பு விழா!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக்.15-**

**'என் உயிரினும் மேலான...' இறுதிப் போட்டி 19ஆம் தேதி நடைபெறுகிறது. முதலமைச்சர் தலைமையில் 20ஆம் தேதி பிரமாண்ட பரிசளிப்பு விழா நடைபெறும் என்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

சென்னை அன்பகத்தில், நேற்று முன்தினம் நடைபெற்ற 'என் உயிரினும் மேலான..!' மண்டல அளவிலான பேச்சுப் போட்டியில் பங்கேற்ற போட்டியாளர்களை நேரில் சந்தித்து, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திப் பேசினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை, கொள்கைத் திருவிழாவாகக் கொண்டாடும் வகையில், கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின் பேரில், 'என் உயிரினும் மேலான..!' பேச்சுப் போட்டி, இளைஞர் அணி சார்பில், மாநிலம் தழுவிய போட்டியாக நடைபெற்று வருகிறது.

முன்னதாக இப்போட்டிக்காக மொத்தம் 17 ஆயிரம் பேர் விண்ணப்பித்திருந்த நிலையில், மாவட்டவாரியாக அவர்களிடையே போட்டிகள் நடத்தப்பட்டு 917 பேர் மண்டல அளவிலான போட்டிகளுக்குத் தேர்வு செய்யப்பட்டார்கள்.

இந்தநிலையில் மண்டல அளவிலான போட்டிகள் நேற்று முன்தினம் சென்னை, திண்டி வனம், இராணிப்பேட்டை, தருமபுரி, திருப்பூர், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய 8 இடங்களில் நடைபெற்றன.

சென்னை மண்டலத்துக்கான போட்டி அன்பகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு போட்டியாளர்களை வாழ்த்தி உரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது :-

நான் இங்கு துணை முதலமைச்சராக வரவில்லை. இளைஞர் அணிச் செயலாளராக வந்து இருக்கிறேன். நடுவர்கள் அக்கா அருள்மொழி அவர்களுக்கும், அண்ணன் எஸ்.கே.பி.கருணா அவர்களுக்கும், சகோதரர் இந்திரகுமார் தேரடி அவர்களுக்கும், கொள்கைக் குரல்களாக வரப்போகின்ற பங்கேற்பாளர்களான சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் வணக்கம்.

பல்வேறு அலுவல்களுக்கு நடுவில், காலையில் இருந்து இந்த நிகழ்ச்சியை சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கிறீர்கள். இன்று ஞாயிற்றுக்கிழமை. பொதுவாக, ஞாயிற்றுக்கிழமை அனைவரும் ஓய்வு எடுப்பார்கள். காலையில் இருந்து நானும் சுற்றிக்கொண்டு இருக்கிறேன். 'ஞாயிற்றுக்கிழமைகூட ஓய்வு எடுக்க மாட்டீர்களா'? என்று என்னைக் கேட்டார்கள்.

அதற்கு, 'நான் ஒருவன் மட்டுமா சுற்றிக்கொண்டு இருக்கிறேன். அன்பகத்தில் வந்து பாருங்கள். கிட்டத்தட்ட நூற்றுக் கணக்கான இளைஞர்கள் அவர்களின் பேச்சுத்திறமையை எப்படி வெளிப்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள் என்று பாருங்கள்' என்று சொல்லிவிட்டுதான் இங்கு வந்திருக்கிறேன்.

**மூன்று பொறுப்புகள்!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி, நம் முதலமைச்சர் அவர்கள் இளைஞர் அணிக்கு மூன்று பொறுப்புகள் கொடுத்தார்கள். அதில் மிகமிக முக்கியமான பொறுப்பு தான் இந்தப் பேச்சுப்போட்டி. தேர்தல் நேரம், மற்ற பணிகளால் போட்டியை நடத்தி முடிக்க கொஞ்சம் தாமதமாகிவிட்டது. இருந்தாலும், இவ்வளவு பெரிய வரவேற்பு கிடைக்கும் என்று, நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை.

கிட்டத்தட்ட 17 ஆயிரம் பேர் தமிழ்நாடு முழுக்க விண்ணப்பித்தார்கள். ஏதோ இரண்டு நாள், ஒரு வாரத்தில் முடித்து விடாமல், முதல் சுற்றில் தேர்வானவர்களுக்கு பயிற்சி கொடுத்து, ஒவ்வொரு 20 பேருக்கும் ஒரு பயிற்சியாளரை நியமித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

**8 இடங்களில் பேச்சுப்போட்டி!**

இன்று அன்பகத்தில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுக்க 8 இடங்களில் இந்த பேச்சுப்போட்டி நடந்துக்கொண்டு இருக்கிறது. நம் கழகத்திற்கு ஆற்ற வேண்டிய மிகப் பெரிய கடமையை ஆற்றிக்கொண்டு இருக்கிறோம்.

இங்கு அமர்ந்திருந்த அரைமணிநேரத்தில், நான்கு பேர் பேசியதை நான் கேட்டேன். மிகவும் அருமையாக, சிறப்பாகப் பேசினீர்கள். இங்கு பேசியவர்கள் அனைவருக்கும் என் வாழ்த்துகள். நீங்கள் அத்தனைபேருமே வெற்றியாளர்கள்தான்.

முதல் பரிசு ரூ. 1 லட்சம், இரண்டாவது பரிசு 75 ஆயிரம், மூன்றாம் பரிசு 50 ஆயிரம் என அறிவித்தோம். கலந்து கொண்ட அனைவருக்கும் அதாவது 17 ஆயிரம் பேருக்கும் பரிசு கொடுக்க எனக்கு ஆசைதான். இருந்தாலும், பரிசு கொடுக்க முடியாது. தமிழ்நாட்டின் நிதி நிலைமை எப்படி இருக்கிறதோ அதேபோல்தான் இளைஞர் அணி நிதி நிலைமையும் இருக்கிறது. அதனால், அடுத்த முறை இந்தப் பரிசுத்தொகை இன்னும் அதிகப்படுத்தப்படும்.

**உங்களின் ஆர்வம்!**

உங்களின் ஆர்வம் எங்களை எல்லாம் மகிழ்ச்சி அடைய வைத்திருக்கிறது. ஒரு மிகப்பெரிய நம்பிக்கை ஏற்பட்டு இருக்கிறது. சில பேர் பேசும்போது கொஞ்சம் தயங்கினீர்கள், நானும் அதைப்போலத்தான். எனக்கு மைக் கொடுத்து மக்களிடம் பேச சொன்னீர்கள் என்றால், ஜாலியாக சரளமாகப் பேசிவிடுவேன்.

எனக்கு எதுகை, மோனையுடன் எல்லாம் பேசத் தெரியாது. இப்போது கடைசியாக ஒரு தம்பி பேசினார், அது மாதிரி எல்லாம் என்னால் பேசவே முடியாது. சுட்டுப்போட்டாலும் எனக்கு வராது. நானெல்லாம் மனதுக்கு தோன்றுவதை மனதில் இருப்பதைப் பேசுவேன். உண்மையைப் பேசுவேன். கழகத்தின் கொள்கையைப் பேசுவேன். நம் முதலமைச்சரின் திட்டங்களைப் பற்றி பேசுவேன்.

இன்னும் சொல்லப்போனால், கலைஞர் முன் பேச எனக்கு இரண்டு, மூன்று வாய்ப்புகள் கிடைத்து இருக்கிறது. 10, 12 வருடத்திற்கு முன்பு, ஒரு திருமண நிகழ்ச்சியில் வரவேற்புரை ஆற்றும் வாய்ப்பு கிடைத்தது. பேசும்போது வியர்த்துக் கொட்டியது. இப்போதும் கூட முதலமைச்சரின் முன்பு பேசுவதற்குப் பயப்படுவேன். எப்போது பேச்சை முடித்துவிட்டு, போவோம் என்று இருக்கும்.

**அனைவரும் வெற்றியாளர்கள் தான்!**

அதுவும் இங்கே நன்றாகப் பேசும்போது உங்களுக்கு எச்சரிக்கை மணி அடிக்கிறார்கள். 'நல்லா பேசிக்கொண்டு இருக்கும்போது ஏன் எச்சரிக்கை மணி அடிக்கிறார்கள்' என்று தோன்றுகிறது. இருந்தாலும், இன்றைக்குள் நிகழ்ச்சியை முடிக்க அந்த எச்சரிக்கை மணி அவசியம்.

இங்கு வந்து பங்கேற்று இருக்கின்ற அனைவரும் வெற்றிப் பெற்றவர்கள் தான். உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். கழகத்தின் எதிர்காலமே நீங்கள் தான். உங்களைச் சந்தித்ததில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

**தொலைக்காட்சி விவாதங்கள்!**

நீங்கள் நன்றாகப் பேசுவதற்கு ஒரு சின்ன குறிப்பு தருகிறேன். நம் கழகத்திற்கும், மற்ற இயக்கங்களுக்குமான வித்தியாசத்தை நீங்கள் உணரலாம். திங்கள் முதல் ஞாயிற்றுக்கிழமை வரை செய்தி சேனல்களைப் பார்க்கத் தொடங்குங்கள். அதில் முக்கியமான விவாதங்களை எடுத்துக்கொள்ளுங்கள். அதில் நம் கழகத்தின் பேச்சாளர்கள். நம் கழகத்தின் சார்பாக, கூட்டணி கட்சிகளின் சார்பாக வருபவர்கள் மிகச் சிறப்பாகப் பேசுவார்கள். நல்ல கருத்துகளைப் பேசுவார்கள். நீங்கள் கூர்ந்து கவனித்தீர்கள் என்றால், உங்களுக்கே தெரியும்.

**தாக்கிப் பேசுவார்கள்!**

எதிர்க்கட்சியில் இருந்து வருவார்கள். அது என்ன அணி என்று சொல்ல முடியாது. இந்த அணி, அந்த அணி என்று சொல்லிக்கொண்டு வருவார்கள். அவர்களுக்குள்ளேயே தாக்கிப் பேசிக் கொள்வார்கள். பா.ஜ.கவினர் மட்டும் பார்த்தீர்கள் என்றால் பெயர் போட மாட்டார்கள். தொழிலதிபர், தொழில் வல்லுநர், கல்வியாளர்... என்று நிறைய பேர் வருவார்கள்.

அருள்மொழி அக்காதான் ஒருமுறை, 'எங்களுக்கு எல்லாம் பெயர் போடுகிறீர்களே, திராவிடர் கழகம் என்று போடுகிறீர்கள், தி.மு.க என்று போடுகிறீர்கள், காங்கிரஸ் என்று போடுகிறீர்கள் அவர்களுக்கு மட்டும் ஏன் இப்படி பெயர் போடுகிறீர்கள். அவர்கள் மட்டும் செட் ப்ராபர்ட்டியாக இங்கேயே அவர்களை எல்லாம் வைத்து இருக்கிறீர்களா' என்று கேட்டார்கள். முடிந்தவரை செய்தி சேனல்களைப் பார்க்க முயற்சி செய்யுங்கள்.

**எழுதி வளர்ந்த இயக்கம்!**

தி.மு.க பேசி, எழுதி, படித்து வளர்ந்த இயக்கம். அந்தத் தொடர்பை உறுதிப்படுத்தும் வகையில்தான் இதுபோன்ற போட்டிகள் நடத்தப்படுகின்றன. வருகின்ற 19ம் தேதி இந்தப் போட்டிக்கான இறுதிப்போட்டியும், 20ஆம் தேதி முதலமைச்சர் அவர்களின் கைகளால் முதல் மூன்று இடங்களைப் பிடிக்கும் பேச்சாளர்களுக்கான பரிசும் வழங்கப்பட இருக்கிறது. எனவே, உங்களை எல்லாம் மீண்டும் இறுதிப் போட்டியில் அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் சந்திக்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் இந்தப் போட்டியை, வெற்றிப் போட்டி ஆக்கிய மாவட்டக் கழகச் செயலாளர்கள், அமைச்சர்கள் மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இதை ஒருங்கிணைத்த இளைஞர் அணி நிர்வாகிகள், நடுவர்கள் அத்தனை பேருக்கும், முக்கியமாகக் கலந்துகொண்ட அத்தனை சகோதர, சகோதரிகளுக்கும் மீண்டும் என் நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞர் அருள்மொழி, எஸ்.கே.பி.கருணா, பத்திரிகையாளர் இந்திரகுமார் தேரடி, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல், சட்டமன்ற உறுப்பினர்களும் மாவட்ட அமைப்பாளர்களான எபினேசர், பிரபாகரராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் ராஜா அன்பழகன், வழக்கறிஞர் பிரகாஷ், ஆர்.டி.மதன் குமார், இளைஞர் அணி ஒருங்கிணைப்பாளர் அன்பகம் செந்தில் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.